**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 114/2024 | | |
| பெயர் : பானுமதி | பு.சா.1 | நாள் : 19.01.2026 |

புகார்தாரர் தரப்பு சாட்சியான பு.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.சுனில்குமார், கிரேடு 3 பென்ச் கிளர்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**(எதிரி ஆஜர் இல்லை . எதிரி வழக்கறிஞர் ஆஜர். எதிரிக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1)எனது புகாரின் 3 வது பத்தியில் எதிரி என்னிடம் இருந்து பெற்ற கடன் தொகையை தவணை முறையில் திருப்பி அளிப்பதாக கூறியிருந்தார் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. குறிப்பிட்ட இடைவேளையில் கடன் தொகையை திருப்பி பெற்றுகொள்ள நான் சம்மதித்தாக 3 வது பத்தியில் குறிப்பிட்டுள்ளேன் என்றல் சரியல்ல. எதிரியிடமிருந்து நானோ எனது குடும்பத்தாரோ இதுவரை எந்த தொகையும் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையை தவிர்த்து எதிரியிடமிருந்து நான் எந்த காசோலையும் வாங்கவில்லையென்றால் சரிதான். நான் எதிரியிடமிருந்து 000221, 000222, 000223 எண்கள் கொண்ட காசோலையை பெறவில்லை என்றால் சரிதான். எதிரி எனது நண்பர் மூலம் அறிமுகம் ஆனார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தின் 1ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பொன்னேரியில் உள்ள பாலசுப்ரமணி என்ற எனது நண்பர் மூலம் எதிரி எனக்கு அறிமுகம் ஆனார். பாலசுப்ரமணியின் முகவரி எனக்கு தெரியாது.

2) பாலசுப்ரமணி எப்போது எனக்கு எதிரியை அறிமுகம் செய்து வைத்தார் என்று எனக்கு தேதி நினைவு இல்லை. எதிரியை எனக்கு 2000 ஆண்டிலிருந்து தெரியும். எதிரி என்னிடம் நேரடியாக வந்து கடன் வாங்கினார். அப்போது எதிரியின் கணவரும் மகளும் உடன் இருந்தனர். எதிரிக்கு 2020 ல் கடன் கொடுத்தேன். தேதி மாதம் நினைவு இல்லை. எதிரிக்கு ரூபாய் 18 லட்சம் கடன் கொடுத்தேன். அந்த பணத்தை எனது கணவரிடமிருந்து வாங்கி கொடுத்தேன். எனது கணவர் ஆயில் மில் வைத்திருந்தார்.

**( எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

ஓம்/– பானுமதி

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.01.19 13:03:35 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி